விடை—

(அ) ஆம்.

(ஆ) இத்திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, மதிப்பீடும் தயாரிக்கப்பட்டு தல அதிகாரிகளின் பரிசீலனையில் உள்ளது.

வைகைக் கால்வாய் சீரமைப்புப்பணி

*வினா எண். 847—திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிகு நீர்ப்பாசனத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் தொகுதியில் வைகைக் கால்வாயைச் சீரமைக்கும் பணி தொடங்கப்பட்டு விட்டதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

விடை—

(அ) ஆம்.

(ஆ) உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்பட்டு வரும் பெரியாறு வைகை நவீனப்படுத்தும் திட்டத்தில், 28 கி.மீ. நீளமுள்ள திருமங்கலம் பிரதான கால்வாய் மற்றும் அதன் 22 கி.மீ. நீளமுள்ள கிளைச் கால்வாய்கள் சீரமைப்புப் பணிகள் முடிக்கப்பட்டு விட்டன. திருமங்கலம் பிரதான கால்வாயின் பங்கீட்டு கால்வாய்களுக்கு (Distributories) தளமிடும்பணி நடைபெற்று வருகிறது.

சேனூர் பகுதியில் கிடைக்கும் அபிரகம்

* வினா எண் 848—திரு. இல். பலராமன்: மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா

(அ) வடஆற்காடு மாவட்டம், போளூர் வட்டாரம், சேனூர் பகுதியில் பூமிக்கடியில் அபிரகம் என்னும் பொருள் கிடைப்பது உண்மையா?—

(ஆ) இதுகுறித்து பரிசீலிக்கப்பட்டதா?

விடை—

(அ) இல்லை.

(ஆ) ஆம்.